| | | |
|---|---|---|
| **யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி** | | |
| **முதலாம் தவணைப்பரீட்சை - 2018** | | |
| **தரம் -07** | **கணிதம்** | **நேரம் : 2 மணித்தியாலம்** |

## பகுதி I

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

1) 9 பேனாக்களின் விலை ரூபா 108 எனின் ஒரு பேனாவின் விலை யாது?

2) ஒரு செவ்வகத்திற்கு எத்தனை சமச்சீர் அச்சுக்கள் உள்ளன?

3) சுருக்குக. $\frac{1}{6}+\frac{5}{12}$


4) இடைவெளி நிரப்புக. $\frac{6}{9}=\frac{\square}{3}$

5) 76849372 என்ற எண்ணை சொற்களில் எழுதுக.

6) $A=\{$ 16 இலும் குறைந்த முக்கோண எண்கள்$\}$, தொடை $A$ ஆயின் மூலகங்களை இரட்டை அடைப்புக்குறிக்குள் எழுதுக?

7) பி. ப 2.35 இனை நியம முறையில் எழுதுக?

8) தரப்பட்ட கோணம் $A\hat{B}C$ இன் புயங்கள், உச்சியினை எழுதுக?




9) 5 மணியாகும் போது நிமிட, மணித்தியால முள்ளிற்கு இடைப்பட்ட பெரிய கோணம் எவ்வகை கோணமாகும்?

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

10) கி. பி 1396 பின்னர் வரும் முதலாவது லீப் வருடம் எது?

11) 2 மணித்தியாலம் 29 நிமிடத்தினை நிமிடத்துக்கு மாற்றுக?

12) 18, 24 என்பவற்றால் வகுக்கும் போது மீதி 2 ஆகவுள்ள சிறிய எண் யாது?


13) பின்வரும் எண்களை ஏறுவரிசைப்படுத்துக. $-5, 3, -3, 0, 9$

14) சுருக்குக. $12\ kg\ 132\ g - 07\ kg\ 978\ g$.

15) 1 நாளில் எத்தனை செக்கன் உள்ளது.


Education கல்வி

16) நிழற்றப்பட்ட உருவின் பின்னம் யாது?




17) 5 ☐ 2 என்ற மூவிலக்க எண்ணாது 4, 6 இனால் மீதியின்றி வகுபடும். தரப்பட்ட பெட்டிக்கு பொருத்தமான இலக்கத்தினை எழுதுக.


18) தரப்பட்ட கோடு $PQ$ ற்கு $A$ என்ற புள்ளியினூடாக சமாந்தர கோடு ஒன்றினை வரைக.




19) தரப்பட்ட செவ்வகத்தின் சுற்றளவு காண்க?




20) தரப்பட்ட உருவில் எத்தனை முக்கோணிகள் உள்ளன.



(20X 2= 40 புள்ளிகள்)




kalvi.lk

## பகுதி II

❖ முதலாம் வினா உட்பட ஏனைய ஐந்து வினாக்களுக்கு விடைளிக்குக.

i.

a) பின்வரும் இருபுடை சமச்சீர் உருவை பூரணப்படுத்துக.



b) பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| எண் | இலக்கச்சுட்டி | 6 ஆல் வகுபடுமா | எண் 9 ஆல் வகுபடுமா |
|---|---|---|---|
| 5276 | | | |
| 4812 | | | |

c) i. கூட்டுக.

| | ஆண்டு | மாதம் | நாள் |
|---|---|---|---|
| | 05 | 07 | 17 |
| + | 02 | 09 | 25 |

ii. கழிக்குக.

| | நாள் | மணி | நிமிடம் |
|---|---|---|---|
| | 05 | 10 | 25 |
| - | 03 | 18 | 42 |

d) சுருக்குக.

1) $540 - 18 \times 10 \div 2$.

2) $120 \div 5 \times 4 + (12 \div 3)$

(2+6+4+4)

2) $A = \{$"MAHARAGAMA" எனும் சொல்லிலுள்ள எழுத்துக்கள்$\}$

1) இத் தொடையில் மூலகங்களை இரட்டை அடைப்பினுள் எழுதுக.

2) B என்ற மூலகம் உள்ளடங்குமா?

3) எத்தனை மூலகங்கள் காணப்படுகின்றன.

4) எத்தனை இருபுடைச் சமச்சீர் உள்ள மூலகங்கள் உள்ளன? அவை எவை?

5) மூலகங்களை வென்வரிப் படம் ஒன்றில் குறித்துக் காட்டுக.

(2+2+2+3+2)



kalvi.lk

3)

1) 24 இன் எல்லா காரணிகளையும் எழுதுக.

2) 36 இன் முதன்மைக் காரணிகளை காண்க?

3) 48 இனை முதன்மைக் காரணிகளின் பெருக்கமாக எழுதுக?

4) 18, 24, 48 என்ற எண்களின்

a) பொ.ம.சி காண்க?

b) பொ.கா.பெ காண்க?

(2+2+2+2+3)

4) கமல், ராஜா, பாலா ஆகியோர் நண்பர்கள். கமல் 4ம் திகதி வைகாசி 1999ம் ராஜா 15ம் திகதி மாசி 2000ம் ஆண்டு பிறந்தார்கள். பாலா இவர்களில் எல்லோரிலும் இளமையானவர். அவர் 1 வருடம் 5 மாதம் 25 நாள் ராஜாவிலும் இளமையானவர்.

1) கமலன் பிறந்த திகதியை நியம முறையில் எழுதுக.

2) கமல் ராஜாவிலும் பார்க்க எவ்வளவு வயதால் கூடியவர்.

3) பாலாவின் பிறந்த தினத்தை காண்க.

4) 4ம் திகதி பங்குனி 2015 அன்று பாலாவின் வயதைக் காண்க.

5) பாலா கமலிலும் பார்க்க எவ்வளவு வயதால் குறைந்தவர்.

(2+2+2+3+2)



kalvi.lk

5)i) $A = (+2)$, $B = (-3, 5)$, $C = (-1\frac{1}{2})$ ஆகிய திசை கொண்ட எண்களை எண்கோட்டில் குறிக்க.

ii) எண்கோட்டை பயன்படுத்தி கூட்டுக?

$a) (-2) + (+4)$ $b) (-3) + (-2)$

iii) சுருக்குக.

$a) (+4) + (-2.5)$ $b) (+5.2) + (-2.9) + (+3.4)$

(3+4+4)

6) i. 125 இனை 5 ஐ அடியாகக் கொண்ட சுட்டிக் குறியீட்டில் எழுதுக.

ii. $2^5y^3$ என்ற கோவையை விரித்து எழுதுக?

iii. $3^3 \times 4^2$ இன் பெறுமானம் காண்க?

iv. $a = 3, b = 4$ எனின் பின்வரும் கோவைகளின் பெறுமானங்களை காண்க?

$a) 2a^2b^3$ $b) 4a^3 + 2b^2$

Education கல்வி අධ්‍යාපන

(2+2+2+5)

7) நேர் விளிம்பு, மூலமட்டம் என்பவற்றை பயன்படுத்தி தரப்பட்ட உருவை வரைக.

i. $6cm$ நீளமுடைய நேர்கோட்டுத் துண்டம் $PQ$ ஐ வரைக.
ii. அக்கோட்டிற்கு செங்குத்தாக புள்ளிகள் $A, B$ இனூடாக நேர்கோடுகள் இரண்டை வரைக.
iii. $Ps = 5\ cm, QR = 5\ cm$ ஆகுமாறு புள்ளிகள் $RS$ ஐ குறிக்க.
iv. புள்ளிகள் $R$ ஐயும் $S$ ஐயும் இணைக்க
v. நேர்கோடு $RS$ இன் நீளத்தை அளக்க.
vi. இந்நாற்பக்கலில் சமாந்தர கோடு ஒன்றினை எழுதுக.
vii. $PQRS$ எவ்வகையான நாற்பக்கல் ஆகும்

(2+2+2+1+2+2+1)



kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk


2025
1ம் தவணை வகுப்புகள்
தரம் 6 முதல் 11 வரையான
மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில
மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.
ஆரம்பம் 01.01.2025
இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.
அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...
Education
கல்வி
අධ්‍යාපන
Kalvi.lk
Whatsapp
075 287 1457